அதனால், திருத்துறைப்பூண்டியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் இதர அலுவலங்களில் அரசு ஊழியர்கள் எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, தேவைப்படின் அங்கு வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று பரிசீலனை செய்து நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 318, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

318—

உயர்மட்டப் பாலம்

*44397—**திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை வட்டம், மேலூர்-இளையான்குடி சாலையில் செம்மனூர் அருகில் உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை வட்டம், மேலூர்-இளையான்குடி சாலையில், செம்மனூர் அருகில் நட்டாற்றின் குறுக்கே சுமார் ரூ.385.00 இலட்சம் செலவில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர்-மாயவரம்-காரைக்கால் வரை செல்கின்ற கிழக்குக் கடற்கரைச் சாலையும், சிதம்பரத்திலிருந்து-திருச்சி வரை செல்கின்ற புறவழிச் சாலையும், சிதம்பரத்திற்கு அருகில் சந்திக்கின்ற இடத்தில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு, உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இரண்டு சாலைகளும் சந்திக்கின்ற இடத்தில் உயர்மட்ட மேம்பாலம் கட்டித்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

(முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலை தேசிய நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வரும் சாலை என்று கருதுகின்றேன். அந்தப் பகுதியில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன; ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, ஆய்வு அறிக்கைகள் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு முறையாக அனுப்பப்பட்டு, பணிகள் துவங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.*

முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீண் அறிக்கைமூலமும் பேட்டி கொடுத்தும் காலத்தை வீணடிக்கும் வீணர்கள் மத்தியில், வீரத்தோடு போராடி வேட்டிக்கு மரியாதை தேடித் தந்த வீரமங்கை வேலுநாச்சி, வாழும் காலத்து வரலாறு, எங்கள் காலப் பெட்டகம், கருணை விளக்கு, கண்கண்ட தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாலவநத்தம், சூலக்கரை சாலையில் கி.மீ. 3/2-ல் ஒரு தாம்போகி causeway *அமைந்துள்ளது. இந்தத் தாம்போகியில் மழைக் காலங்களில் மழை நீர் அதிகமாகி போக்குவரத்துக்குத் தடை ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் தாம்போகியைத் இடித்துவிட்டு, ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "உயர்மட்டப் பாலம் அமைக்க உத்தரவிடப்படுமா?" என்று இங்கே வினா தொடுத்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.*

திரு. சி.எச். சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மக்களின் 50 வருட கோரிக்கையான ஊத்துக்கோட்டையிலிருந்து திருவள்ளூர் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் ஆரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "ஊத்துக்கோட்டை அருகே ஆரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும்" என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ஒவ்வோராண்டும் நபார்டு*

திட்டத்தின்கீழ், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் பாலங்களைக் கட்டிக் கொடுத்து வருகிறது. அந்த வகையில், இதனை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பாலம் கட்டுவதற்கு, நிதிநிலைமைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், பத்மநேரி ஊராட்சி, மேலவடகரைக்கும் களக்காடு பேரூராட்சி, கீழ்ப்பட்டிக்கும் இடையே பச்சையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும்பட்சத்தில், கீழவடகரை, மேலவடகரை, வண்டிக்காரன் நகர், காமராஜர் நகர் மற்றும் அருகில் சுற்றியுள்ள கிராம மக்கள், தங்கள் விவசாய விளைபொருட்களைக் களக்காட்டிற்கு எடுத்துச் செல்ல 3 கி.மீ. தூரம் செல்ல வாய்ப்பு ஏற்படும். ஆனால், தற்போது, விவசாயிகள் 12 கி.மீ. தூரம் சுற்றி களக்காடு செல்கிறார்கள். எனவே, அங்கு வாழும் மக்களின் பயணச் சுமையைக் குறைக்கும்பொருட்டு, ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும்" என்று கேட்டுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 3 ஆண்டு காலத்தில் நபார்டு திட்டத்தின்மூலம் கிட்டத்தட்ட 642 கோடி ரூபாய் செலவில் 311 பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டு, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆண்டுகூட பேரவை விதி 110-ன்கீழ், 100 மேம்பாலங்கள் கட்டுவதற்கு, 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே,*

ஒவ்வோராண்டும் ஓடைகளின் குறுக்கே, ஆறுகளின் குறுக்கே பாலங்கள் கட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட நிதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தருகிறார்கள். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட பகுதியில், ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதப் பொற்பாதங்களை வணங்குகிறேன். எனது சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சி, சூரக்காட்டு பாலம் மிகவும் பழமை வாய்ந்த, பழுதடைந்த பாலமாக உள்ளது. இந்தப் பாலம், திருக்கடையூர், காரைக்கால், நாகூர், நாகபட்டினம், வேளாங்கன்னி, வேதாரண்யம் போன்ற முக்கிய பிரசித்தி பெற்ற கோயில் நகரங்களுக்குச் செல்லும் வழியாக இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு புதிய பாலம் கட்டுவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "சூரக்காடு பகுதியில் ஏற்கெனவே இருக்கின்ற பாலம் பழமையாக இருக்கின்றது, அதற்குப் பதிலாக புதிய பாலம் கட்டித் தரப்படுமா?" என்று வினா தொடுத்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*